# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 7, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021,
1990, ஏப்ரல் 20, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.''

நோய்களுக்கு இடமாகிய உடம்பில் ஒரு மூலையில் குடியிருந்த உயிர்க்கு நிலையாகத் தங்கி வாழ்வதற்கான இல்லம், அதாவது வீடு இதுவரையில் அமையவில்லையோ !

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

பணி மூப்பு அடிப்படையில் கல்வித் துறை அலுவலர்களை நியமிக்கக் கோரிக்கை.

*2325—திரு. செ. நூர்முகமது :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணி மூப்பு அடிப்படையில் பள்ளித் துறை ஆய்வாளர்கள், அறிவியல் ஆய்வாளர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ஆகியோரை நியமிக்க வேண்டுமென்ற ஆசிரியர் இயக்கங்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) அவர்களின் கோரிக்கையை ஏற்று பதவி உயர்வு பணி மூப்பு அடிப்படையில் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மேற்படி பதவிகள் ஒருங்கிணைந்த பணியமைப்பிலிருந்து மாறுதல் மூலம் நியமனம் செய்யப்படுவதால் அட்பதவிகள் பதவி உயர்வு அடிப்படையில் செய்யப்படுவதில்லை.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர்கள், அறிவியல் ஆய்வாளர், முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக

உதவியாளர் போன்ற பதவிகளை வகிப்பவர்களுக்கு அதிகமான சம்பள உயர்வுடன் கூடிய பதவி உயர்வு இல்லையென்றாலும்கூட, அவை தனி விசேஷமான பதவிகள் என்கின்ற வகையில், ஆசிரியர்களாக இருப்பவர்கள் பணி மூப்பு அடிப்படையில் தங்களுக்கு அந்தப் பதவி உயர்வுகள் வழங்க வேண்டும் அல்லது அந்தப் பதவிகள் வழங்கவேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். எனவே, இது ஒரு தனித் தொகுப்பான பதவி உயர்வு இல்லையென்றாலும்கூட அவர்களுடைய அந்த நியாயமான கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்** : தலைவர் அவர்களே, இந்தப் பணிகளுக்கான தகுதியும், ஆசிரியர் பணி ஆற்றுவதற்கான தகுதியும் இரண்டும் ஒன்றுதான். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்களும் அந்த உரிமை பெற்றவர்களாகத்தான் இன்றைக்கு இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கிடையில் ஏறத்தாழ சுழற்சி முறையில், மூன்றாண்டு, ஐந்தாண்டு என்ற அளவிற்கு ஒவ்வொருவராக மாறி அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இருந்தாலும், நிர்வாகப் பணியை ஆற்றுவதற்கு யாருக்குச் சற்று அதிகத் திறன் இருக்கிறது என்பதை மேலே உள்ளவர்கள்—மேல் அதிகாரிகள்—தீர்மானித்து அவர்களை அந்தப் பொறுப்புக்களிலே அமர்த்துகிறார்கள். இது வாய்ப்புக்களைத் தடுக்கக்கூடாது என்ற அடிப்படையிலேயம், பணி திறமையாக நடைபெறவேண்டும் என்ற நோக்கத்திலேயும், ஓரளவு சுழற்சி முறையிலே பலருக்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்ற நோக்கத்திலேயும் நடைபெறுகிற காரணத்தால், இவற்றைத் தனியாக ஒரு அந்தஸ்துடைய பதவியாக மாற்றுவது அவ்வளவு பொருத்தமல்ல.

**திரு. செ. நூர்முகமது** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்றபோது, சுழற்சி முறையில் பலருக்கும் பயன் கொடுக்கின்ற வகையில் இந்தப் பதவியில் அமர்த்தப்படுகிறார்கள் என்ற தகவலைச் சொன்னார்கள். அது நல்ல ஒரு முடிவுதான். அப்படி சுழற்சி முறையிலே ஆசிரியர்கள் அந்தப் பதவியிலே அமர்த்தப்படுகின்ற நேரத்திலாவது பணி மூப்பின் அடிப்படையிலே அந்த சுழற்சி முறையில் நாம் தொடர்ந்து பலருக்கு அந்தப் பதவி வாய்ப்பைக் கொடுப்போமேயானால், தேவையற்ற மனத் தாங்கலும், ஏதோ பாரபட்சமாக நடந்தது போன்ற மனக் குறையும் ஆசிரியர்கள் மத்தியிலே ஏற்பட்டு, அரசின் மேல் ஒரு தவறான எண்ணம் ஏற்படாதிருக்க வாய்ப்பு ஏற்படும். எனவே, சுழற்சி முறையில் பதவி உயர்வு அளிக்கின்றபோதாவது கறாராக சீனியாரிட்டி என்கின்ற பணி மூப்பு அடிப்படையிலே அப்பதவிகள் அளிக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதற்குப் பணி மூப்பு ஒன்றையே அடிப்படையாக வைத்துச் செய்ய முடியாது. ஏனென்றால் பணி மூப்பு அதிகமாக இருந்து அவர்களுக்கும் மூப்பு அதிகமாக இருந்தால் இந்தப் பணியை அவர்கள் நிறைவேற்றுவது மிகக் கடினம். எனவே, இது அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய ஒரு இடமாக, நிர்வாகப் பொறுப்பாக சற்று வேலைப்பளு உடையதாக இருக்கிற காரணத்தால் அதற்கான ஆர்வம், ஊக்கமுடையவர்களைத்தான் அந்தப் பொறுப்பிலே அமர்த்தவேண்டும் என்பது அரசினுடைய நோக்கம்.

9-05 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சுழற்சி முறையிலே மூன்று ஆண்டுக்கு ஒரு முறை அந்த மாறுதல் ஏற்பாடு செய்வதாக இருக்கின்றோம் என்று சொன்னார்கள். அது வரவேற்கக் கூடிய ஒன்று. ஏற்கெனவே 10, 12 ஆண்டுகளாக அந்த ஆய்வாளர் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் திரும்பவும் ஆசிரியர் பணிக்கு மாற்றப்பட்டால், அந்த ஆசிரியர் பணியை அவர்களால் செவ்வனே செய்ய முடியும் என்று அவர்கள் கருதுகிறார்களா? அவர்களுக்காவது ஒரு தனிச் சலுகை அளித்து நிரந்தரமாக அவர்கள் இருக்கின்ற வரையிலே அந்த ஆய்வாளர்கள் பொறுப்பிலே இருப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மூன்றாண்டு என்று நான் சொன்னது, மூன்றாண்டோ, 5 ஆண்டோ, ஆறு ஆண்டோ, அந்த விவரத்தில் சற்றுத் தெளிவான கருத்தை என்னால் சொல்லமுடியவில்லை. ஆனால் ஒன்று, இந்தப் பணியிலே உள்ள சிலர் அவர்களை அறிந்தோ அறியாமலோ ஒருவிதமான தனிச் செல்வாக்கு செலுத்த ஆரம்பித்து விடுகிறார்கள். அந்தத் தனிச் செல்வாக்கு மேலே உள்ள அதிகாரிகளையும் கூடத் தங்கள் நோக்கத்திற்கு இசைய வைத்து விடுகிறது. எனவே, அவர்கள் அவ்வப்போது மாற்றப்படுகிறார்கள். இந்த வாய்ப்பும், உரிமையும் நிர்வாகத்திற்காகத் தேவைப்படுகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர்களாக சீனியர்-மோஸ்ட் செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பதவி உயர்வு செய்வதாக இந்த அரசு முன்பே முடிவு எடுத்து அறிவித்ததாக நான் அறிகிறேன். இது பற்றி அரசு என்ன முடிவை எடுத்திருக்கிறது? விரைவில் ஆணை பிறப்பிக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்கான விடை இப்போது என்னிடத்திலே இல்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பதவிகளையெல்லாம் சுழற்சி முறையிலே நிரப்பிக் கொண்டிருந்தால் நிரந்தரமாக இந்தப் பதவிகளுக்குப் பொறுப்பு கொடுப்பது எப்போது? அப்படிப்பட்ட நிலைமைகள் வராமலே போய்விடுமே. அதற்கு ஏதாவது அரசின் ஏற்பாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, யாருடைய பணியும் நிரந்தரம் இல்லை. அதுவும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பிலேயே இருக்கவேண்டும் என்று கருதினால் அது தவறு. கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பணியும், ஆசிரியர்களைப் பற்றிய பிரச்சினைகளைக் கவனிக்கிற பணியும் இரண்டும் interlinked—ஏறத்தாழ இரண்டும் தொடர்புடைய பணியாக ஒன்றோடொன்று உறவுடைய பணியாகத்தான் இருக்கிறது. இது அவர்களுக்கிடையிலே, ஒரு சங்கத்தினுடைய, தலைவர், செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது, ஒவ்வொருவராக மாறித் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதைப்போல, அவர்களிடையிலும் இதற்கான ஆர்வம் உடையவர்கள் இடம் பெறுவதற்கான வழி, வாய்ப்பு இருக்கத்தான் வேண்டும்.

அரசு உயர்நிலைப் பள்ளி.

*3341—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள வேலம்பாளையம் பேரூராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 30,000-க்கும் அதிகமான மக்கள் வசிக்கக்கூடிய அந்த வேலம்பாளையம் பேரூராட்சிப் பகுதியிலிருந்து, அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் 5, 6 கிலோ மீட்டர் தூரமுள்ள திருப்பூர் நகருக்குத்தான் உயர்நிலைப் பள்ளிக்கோ, மேல் நிலைப் பள்ளிக்கோ வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு உயர்நிலைப் பள்ளி உருவாக்க அரசு இனியாகிலும் முயற்சிக்குமா?